AXIS BANK

தேசிய அளவிலான தீவிர விழிப்புணர்வுத் திட்டம்

முறைப்படுத்தப்பட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கூடிய இந்திய ரிசர்வ் வங்கியின் ஒரு விழிப்புணர்வு முன்முயற்சி

(நவம்பர் 01, 2022 முதல் நவம்பர் 30, 2022 வரை)

பொருளடக்கம்

வ.எண்.	பொருள்	ஸ்லைட் எண்
1	உட்புற குறை தீர்க்கும் உத்தி	3-4
2	மாற்று குறை தீர்க்கும் உத்தி	5-6
3	பாதுகாப்பான டிஜிட்டல் வங்கியியல் நடைமுறைகள்	7-11
4	மோசடி தடுப்பு நடவடிக்கைகள்	12-14
5	வாடிக்கையாளர் பாதுகாப்புக் கொள்கை	15
6	வங்கியியலில் தொழில்நுட்பப் பயன்பாடு	16-17
7	மூத்த மற்றும் மாற்றுத்திறனாளி குடிமக்களுக்கு வீட்டுவாசலில் வங்கி சேவைகள்	18-19
8	எம்எஸ்எம்இ-க்கள்/சுய உதவி குழுக்களுக்குக் கிடைக்கும் வங்கி சேவைகள்	20

தேசிய அளவிலான தீவிர விழிப்புணர்வு திட்டம்

என்ன செய்ய வேண்டும் என்பது தெரியவில்லையா?

உட்புற குறைதீர்க்கும் உத்தி

முதல் கட்ட குறை தீர்த்தல்

- ✓ கிளை / ஏடிஎம்
- ✓ உடனடி அரட்டை/ முகவருடன் அரட்டை
- ✓ எங்களுடன் பேசுங்கள்/ அழைப்பு மையம்
- ✓ மின்னஞ்சல் மூலம் தொடர்பு

இரண்டாம் கட்ட குறை தீர்த்தல்

- ✓ இணைப்பு அதிகாரிக்கு எழுதவும்
- ✓ குறைதீர்க்கும் படிவத்தைப் பதிவிறக்கி அதில் உள்ள முகவரிக்கு அனுப்பவும்
- ✓ கிளை சம்பந்தப்பட்ட புகார்களை வட்ட இணைப்பு அதிகாரியின் பார்வைக்குக் கொண்டுசெல்லவும்

மூன்றாம் கட்ட குறை தீர்த்தல்

- ✓ முதன்மை இணைப்பு அதிகாரியிடம் கொண்டுசெல்லவும்
- ✓ பிஎன்ஓ-வுக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்ப வலைத்தளத்தில் கிளிக் செய்யவும்
- ✓ குறைதீர்க்கும் படிவத்தைப் பதிவிறக்கி அதில் உள்ள முகவரிக்கு அனுபப்வும்



ரிசர்வ் வங்கியின் வங்கிநடைமுறை ஓம்புட்ஸ்மேனை அணுகவும் - வங்கிநடைமுறையின் மூன்றாவது நடுவர்

1. ஒரு மாதத்திற்குள் உங்கள் புகாரை வங்கி திருப்திகரமாக தீர்க்கவில்லை என்றால், ரிசர்வ் வங்கியின் வங்கி குறைதீர்ப்பாளரை அணுகவும்
2. வங்கி குறைதீர்ப்புத் திட்டம் என்பது உங்கள் வங்கி புகார்களைத் தீர்ப்பதற்கான செலவில்லாத மற்றும் தொந்தரவு இல்லாத வழியாகும்
3. வங்கி ஓம்புட்ஸ்மேன் திட்டத்தில் வங்கி சேவைகளின் பல குறைபாடுகள் அடங்குகின்றன

மாற்று குறை தீர்க்கும் உத்தி
ரிசர்வ் வங்கி– ஒருங்கிணைந்த ஒம்புட்ஸ்மேன் திட்டம், 2021

ஒரு வங்கி அல்லது என்பிஎஃப்சி-க்கு எதிராக உங்களுக்கு ஒரு புகார் இருந்தால் தீர்வைப் பெறும் நடைமுறைகள் ?

வங்கிகள் / என்பிஎஃப்சி-கள்

ஒரு மாதத்திற்குள் தீர்வு கிடைக்கவில்லை அல்லது திருப்தியற்ற தீர்வு வழங்கப்பட்டது

ஆர்பிஐ ஒம்புட்ஸ்மேன் அலுவலகம்

ஒரு மாதத்திற்குள் தீர்வு கிடைக்கவில்லை அல்லது திருப்தியற்ற தீர்வு வழங்கப்பட்டது

மேல்முறையீட்டு ஆணையம்

படி 1

- வங்கிகள்/என்பிஎஃப்சி கிளைகள் அல்லது இணையதளத்தில் எழுத்துப்பூர்வமாக புகார் அளிக்கவும்
- உங்கள் புகாரை வங்கிகள்/ என்பிஎஃப்சிகள் தீர்ப்பதற்காக 30 நாட்கள் காத்திருக்கவும்.
- வங்கிகள்/ என்பிஎஃப்சிகள் வழங்கிய தீர்வில் திருப்தி இல்லை என்றால், படி 2 க்குச் செல்லவும்

எஸ்கலேஷன் மேட்ரிக்ஸ்
கிளை மேலாளர் → மண்டல அலுவலகம் → தலைமை அலுவலகம்

படி 2

- https://cms.rbi.org.in இல் உள்ள புகார் மேலாண்மை அமைப்பு போர்ட்டலில் வங்கிகள்/என்பிஎஃப்சி- களுக்கு எதிராகப் புகார் அளிக்கவும். அல்லது;
- இந்திய ரிசர்வ் வங்கியின் மையப்படுத்தப்பட்ட ரெசிப்ட் மற்றும் செயலாக்க மையத்திற்கு கையால் எழுதப்பட்ட புகார்கள்
- புகார் தொடர்பான சந்தேகங்களுக்கு, 14448 என்ற இலவச எண்ணில் அழைக்கவும்

படி 3

- வாடிக்கையாளர் 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டு அதிகாரியிடம் மேல்முறையீடு செய்யலாம். ஒம்புட்ஸ்மேன் வழங்கிய தீர்வில் திருப்தி இல்லை என்றால்
- மேல்முறையீட்டு அதிகாரி இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) துணை ஆளுநர் ஆவார்.

பாதுகாப்பான டிஜிட்டல் வங்கியியல்

- உங்கள் கடவுச்சொற்கள், குறியெண், ஓடிபி, சிவிவி போன்றவற்றை ஆன்லைனில் அல்லது தொலைபேசி மூலமாக யாருடனும் பகிர வேண்டாம்
- எஸ்எம்எஸ், மின்னஞ்சல் அல்லது சமூக ஊடகத் தளங்கள் வழியாக நீங்கள் பெறும் சந்தேகத்திற்கிடமான இணைப்புகளை ஒருபோதும் கிளிக் செய்ய வேண்டாம்

பாதுகாப்பான டிஜிட்டல் வங்கி நடைமுறைகள்

பாதுகாப்பான வங்கி நடமுறைகளுக்குச் செய்ய வேண்டியவை

- ✓ எப்போதும் வங்கிகள்/சேவை வழங்குநரின் அதிகாரப்பூர்வ இணையதளங்களுக்குச் சென்று, பாதுகாக்கப்பட்ட இணையதளங்களைப் பயன்படுத்தவும். உ.ம்., https://- இதில் 's' என்பது பாதுகாப்பான இணையதளத்தைக் குறிக்கிறது
- ✓ உங்கள் மொபைல்/லேப்டாப்/பிசி ஆகியவற்றில் இருந்து அனைத்து கட்டண/நிதி பயன்பாடுகளும் தொழில்நுட்பக் கோளாறுகளை எதிர்கொள்ளும் போதும் அல்லது செயலியைப் பதிவிறக்கும் போதும் வெளியேறவும்
- ✓ வங்கிகள் அல்லது இ-காமர்ஸ் தளங்களைப் போன்று தோற்றமளிக்கும் மோசடியான, போலியான இணையதளங்களைத் தவிர்க்க, அனுகப்படும் இணையதளங்கள்/யுஆர்எல்-களின் எழுத்துப்பிழைகளைச் சரிபார்க்கவும்.
- ✓ பெறப்பட்ட மின்னஞ்சல்களின் எழுத்துப்பிழைகள் மற்றும் தலைப்புகளைச் சரிபார்த்து, மின்னஞ்சல்கள் உண்மையான முகவரிகளிலிருந்து வந்தவை என்பதை உறுதிப்படுத்தவும்
- ✓ சுருக்கப்பட்ட யுஆர்எல்-கள் எஸ்எம்எஸ்/ வாட்ஸ்ஆப்/ மின்னஞ்சல் போன்றவற்றின் மூலம் பெறப்படும் கூகுள் படிவங்களைக் கிளிக் செய்யும் போது கவனமாக இருக்கவும்.
- ✓ வங்கிகள்/இ-காமர்ஸ்/தேடுபொறி வலைத்தளங்களுக்கான இணைப்புகளை வழங்கும் அஞ்சல்களைத் தடுக்கவும்/குழுவிலகவும்/ஸ்பேமாக அறிவிக்கவும்
- ✓ ஆன்லைனில் பொருட்களை வாங்கும்போது/விற்கும்போதும் கவனமாக இருக்கவும். யுபிஐ மூலம் பணத்தைப் பெற பின்/கடவுச்சொல்லை உள்ளிட வேண்டிய அவசியமில்லை
- ✓ வழக்கமான சூழலில் கணிசமான நேரத்திற்கு உங்கள் மொபைலில் மொபைல் நெட்வொர்க் இல்லை என்றால் உடனடியாக உங்கள் மொபைல் ஆபரேட்டரைத் தொடர்பு கொள்ளவும்
- ✓ உங்களுக்குத் தெரியாமல் ஓடிபி உருவாக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த, எஸ்எம்எஸ்/மின்னஞ்சல்களைத் தவறாமல் சரிபார்க்கவும்
- ✓ எந்தவொரு நிறுவனத்துடனும் பரிவர்த்தனை செய்வதற்கு முன், அவை பதிவுசெய்யப்பட்ட மற்றும் உரிமம் பெற்ற நிறுவனமா என்பதைச் சரிபார்க்கவும்
- ✓ அத்தகைய வசதி கிடைக்கும் இடங்களில் டூ ஃபேக்டர் அங்கீகாரத்தை இயக்கவும்
- ✓ ஏடிஎம்-ஐப் பயன்படுத்தும் போது, குறியெண்ணை உள்ளிடும்போது உங்கள் மற்றொரு கையால் கீபேடை மூடி வைக்கவும்
- ✓ பணம் வழங்கப்படாவிட்டால், ஏடிஎம்மில் 'ரத்துசெய்' என்பதை அழுத்தி, முகப்புத் திரை தோன்றிய பிறகே வெளியேறவும்
- ✓ வாடிக்கையாளர் சேவை எண்கள் மொபைல் எண்களின் வடிவத்தில் இல்லை என்பதை நினைவில் கொள்ளவும்
- ✓ சிடிஎம்-மில் பணத்தை டெபாசிட் செய்யும் போது, வளாகத்தை விட்டு வெளியேறும் முன், இயந்திரத்தால் பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பதை உறுதிப்படுத்தவும்
- ✓ கார்டு செருகும் ஸ்லாட் அல்லது ஏடிஎம் இயந்திரத்தின் கீபேடுக்கு அருகில் ஏதேனும் கூடுதல் சாதனம் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை எப்போதும் சரிபார்க்கவும்

பாதுகாப்பான டிஜிட்டல் வங்கி நடைமுறைகள்

பாதுகாப்பான வங்கி நடமுறைகளுக்குச் செய்யக் கூடாதவை

- சான்றுகள் திருடப்படக் கூடுமாதலால் முன்பின் அறிமுகம் இல்லாதவர்களிடம் ஏடிஎம்களில் உதவி கேட்டுப் பெறாதீர்கள்
- சிம் கார்டு மற்றும் மொபைல் எண்ணின் விவரங்களைப் பகிராதீர்கள் அல்லது ஏடிஎம் கார்டில் குறியெண்ணை எழுதாதீர்கள் அல்லது இணையதளங்கள்/சாதனங்கள்/பொது மடிக்கணினிகள்/டெஸ்க்டாப்களில் விவரங்களைச் சேமிக்காதீர்கள்
- வங்கிகள், காப்பீடு, அரசு போன்றவற்றின் கால் சென்டர் ஏஜெண்டுகள் போல காட்டிக் கொள்ளும் நபர்களின் சலுகைகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள், மேலும் பயனர் பெயர், கடவுச்சொல், அட்டை விவரங்கள்/குறியெண்/சிவிவி/ஓடிபி, பிறந்த தேதி, ஆதார் எண், குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள் போன்றவற்றைப் பகிரச்சொல்லி வலியுறுத்தப் படும்போதும்/ பிறவகையிலும் ஏமாறாதீர்கள்.,.
- தேடுபொறிகள், எஸ்எம்எஸ், சமூக ஊடகங்கள், மின்னஞ்சல்கள் போன்றவற்றிலிருந்து சேவை வழங்குநர்களின் தொடர்பு விவரங்களைத் தேட வேண்டாம்.
- அறியாத/சரிபார்க்கப்படாத இணைப்புகளைக் கிளிக் செய்யாதீர்கள் மற்றும் அறிமுகமற்ற நபர்களின் ஆலோசனையின் பேரில் சரிபார்க்கப்படாத மூலங்களிலிருந்து செயலிகளைப் பதிவிறக்க வேண்டாம்
- கமிஷனுக்காகவோ அல்லது வேறு ஒன்றிற்காகவோ உங்கள் வங்கிக் கணக்குகள்/ஏடிஎம் கார்டுகளை மற்றவர்கள், பயன்படுத்த அனுமதிக்காதீர்கள், இது பணத்தைப் பரிமாற்றம் செய்ய வங்கிக் கணக்கை தவறாகப் பயன்படுத்துவதற்காக போலீஸ் விசாரணைக்கு வழிவகுக்கலாம்.
- உங்கள் கேஒய்சி விவரங்கள்/கணக்கு விவரங்கள்/ஏடிஎம் கார்டு விவரங்கள்/குறியெண்/சிவிவி/ஓடிபி விவரங்களைக் கோரும் அழைப்புகள்/மின்னஞ்சல்கள்/எஸ்எம்எஸ்-களுக்குப் பதிலளிக்க வேண்டாம்.
- நம்பமுடியாத லாட்டரி சலுகைகளை நம்பாதீர்கள் மற்றும் அத்தகைய மின்னஞ்சல்கள்/அழைப்புகளுக்குப் பதிலளிக்கும் போது பாதுகாப்பான ஆவணங்களைப் பகிரவும்
- ரிசர்வ் வங்கியிடம் பெரும் தொகை இருப்பதாகவும், அதை விடுவிக்க கொஞ்சம் தொகை செலுத்த் வேண்டும் என்பது போன்ற செய்திகளுக்கு பதிலளிக்க வேண்டாம்.
- கடன் செயலாக்க கட்டணத்தை முன்பணமாகச் செலுத்தி ஏமாறாதீர்கள்
- சலுகைகள்/ பரிசுத் தொகை, அரசாங்க உதவி வாங்கித்தரும் வாக்குறுதி/பணம்பெற கேஒய்சி அப்டேட் /மொபைல் ரீசார்ஜ் செய்ய/வேலை வாய்ப்பு போன்ற செய்திகளுக்குப் பதிலளிக்க வேண்டாம்.
- குறைந்த வட்டி விகிதத்தில்/பாதுகாப்பான உடனடி கடனுக்கான ஆன்லைன் சலுகைகளுக்காகப் பணம் செலுத்தவோ அல்லது பாதுகாப்பான ஆவணங்களை உள்ளிடவோ வேண்டாம்
- நிதி செயலிகள் பயன்படுத்தப்படும் அதே சாதனத்தில் ஸ்கிரீன் ஷேரிங் செயலிகளைப் பயன்படுத்த வேண்டாம்
- யுபிஐ குறியெண்ணை அழுத்திய பின் பணத்தை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் அறியாத கட்டணச் செயலிகளைப் பயன்படுத்தி கியூஆர் குறியீடுகளை ஸ்கேன் செய்ய வேண்டாம்.
- பொது சார்ஜிங் புள்ளிகள் அல்லது பாதுகாப்பற்ற வைஃபையைப் பயன்படுத்த வேண்டாம், ஏனெனில் அவை மால்வேரை மாற்றவும், மொபைலில் இருந்து தரவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் பயன்படுத்தப்படலாம்.

எலக்ட்ரானிக் பேங்கிங்

செய்க

- பணம் செலுத்துவதற்காக சரிபார்க்கப்பட்ட மற்றும் நம்பகமான உலாவிகள் மற்றும் HTTPS ஆல் பாதுகாக்கப்பட்ட இணையதளங்களை மட்டுமே பயன்படுத்தி உங்கள் வங்கியின் URL ஐ எப்போதும் தட்டச்சு செய்யவும் (S என்பது பாதுகாப்பானது). URL சாளரத்தில் (படம்) பாதுகாப்பான அடையாளத்தை (லாக்) தேடவும்
- எண்ணெழுத்து மற்றும் சிறப்பு எழுத்துருக்களை (#.", @. $ போன்றவை) பயன்படுத்தி, உங்கள் கடவுச்சொற்களை யூகிப்பதற்குக் கடினமானவைகளாக மாற்றவும்.
- உங்கள் கடவுச்சொல்லை அடிக்கடி மாற்றி அமையுங்கள்
- உங்கள் கட்டண பரிவர்த்தனை பயன்பாடுகளை (வங்கிகள், வங்கிகள் அல்லாதவை, வாலட்டுகள் போன்றவை) எப்போதும் சமீபத்திய பதிப்பிற்குப் புதுப்பிக்கவும்
- உங்கள் மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் ஐடியை உங்கள் வங்கிக் கணக்குடன் இணைத்து எஸ்எம்எஸ்/மின்னஞ்சல் எச்சரிக்கை சேவையைத் தேர்வுசெய்யவும்
- ஏதேனும் அசாதாரண/அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை நடந்தால், உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்கவும்

செய்யாதீர்

- ஆன்லைன் தேடல் மூலம் உங்கள் வங்கியின் வலைத்தளத்தை அணுக வேண்டாம்.
- உள்நுழைவு ஆவணங்களை தொலைபேசியில் ஒருபோதும் சேமிக்க வேண்டாம், மேலும் நம்பத்தகாத போர்டல்கள்/சேவை வழங்குநர்கள் வசம் ஆவணங்களை உள்ளிடவும்/சேமிக்கவும் வேண்டாம்
- பொது சாதனங்கள், சைபர் கஃபேக்கள் மற்றும் பொது/இலவச வைஃபை போன்ற பாதுகாப்பற்ற/திறந்த நெட்வொர்க்குகள் மூலம் பரிவர்த்தனை செய்வதைத் தவிர்க்கவும்
- உங்கள் மொபைல் பேங்கிங் குறியெண் அல்லது இன்டர்நெட் பேங்கிங் ஐடி, கடவுச்சொல் மற்றும் ஓடிபி ஆகியவற்றை யாருடனும் (வங்கி ஊழியர்கள் உட்பட) பகிர வேண்டாம்

யூனிஃபைட் பேமெண்ட் இன்டெர்ஃபேஸ் (யுபிஐ)

செய்க

- யுபிஐ செயலியைப் புதுப்பித்த நிலையில் வைத்திருங்கள்
- வணிகர்/நபரின் சேகரிப்பு கோரிக்கையை ஏற்கும் முன் எப்போதும் மதிப்பாய்வு செய்யவும்
- பரிமாற்றத்தை செயல்படுத்தும் முன் தொகை மற்றும் பயனரை மீண்டும் சரிபார்த்து மீண்டும் உறுதிப்படுத்தவும்

செய்யாதீர்

- உங்கள் குறியெண்ணை யாருடனும் பகிர வேண்டாம்
- பெறுநரைச் சரிபார்க்காமல்/உறுதிப்படுத்தாமல் பணப் பரிமாற்றம் செய்வதைத் தவிர்க்கவும்

நுகர்வோர் விழிப்புணர்வு – சைபர் அபாயங்களும் மோசடிகளும்

பயனர் ஐடி, உள்நுழைவு / பரிவர்த்தனை கடவுச்சொல், ஓடிபி (ஒரு முறை கடவுச்சொல்), டெபிட் / கிரெடிட் கார்டு விவரங்களான குறியெண், சிவிவி, முடிவுத் தேதி மற்றும் பிற தனிப்பட்ட தகவல்கள் போன்ற ரகசிய விவரங்களைப் பெற மோசடி செய்பவர்கள் முயற்சிக்கின்றனர். மோசடி செய்பவர்களால் பயன்படுத்தப்படும் பொதுவான செயல்பாடுகளில் சில -

விஷிங் – கேஒய்சி புதுப்பித்தல், கணக்கு/சிம் அன்பிளாக், டெபிட் செய்யப்பட்ட தொகை வரவு போன்ற சாக்குப்போக்கில் வாடிக்கையாளரைக் கவர வங்கி / வங்கியல்லாத இ-வாலட் வழங்குநர்கள் / தொலைத் தொடர்பு சேவை வழங்குபவர்களிடம் இருந்து வரும் அழைப்புகள் போன்றவை

ஃபிஷிங் - வாடிக்கையாளர்களைத் தங்கள் வங்கி / இ-வாலட் வழங்குநரிடம் இருந்து வந்ததாக எண்ண வைக்கும், அந்தரங்க விவரங்களை கவர்ந்தெடுக்கும் இணைப்புகளுடன் கூடிய ஸ்பூஃப் செய்யப்பட்ட மின்னஞ்சல்கள் மற்றும்/அல்லது எஸ்எம்எஸ்-கள்.

ரிமோட் அணுகல்- வாடிக்கையாளரின் மொபைல் / கணினியில் ஒரு செயலியைப் பதிவிறக்கம் செய்வதன் மூலம் வாடிக்கையாளரின் அனைத்துத் தரவையும் அவரது சாதனத்தில் அணுகமுடியும்.

UPI
UNIFIED PAYMENTS INTERFACE

பணத்தைப் பெற ‘உங்கள் யுபிஐ குறியெண்ணை உள்ளிடவும்’ போன்ற போலியான கட்டணக் கோரிக்கைகளை அனுப்புவதன் மூலம் யுபிஐ-யின் சேகரிப்புக் கோரிக்கை அம்சத்தைத் தவறாகபொ பயன்படுத்துதல்.

தேடுபொறிகள் மூலம் வலைப்பக்கங்கள்/ சமூகஊடகங்களில் வங்கிகள்/ மின்வாலட் வழங்குநர்களின் போலி எண்களைக் காட்சிப்படுத்தல் போன்றவை

ஒரு மோசடி நடந்தால் எடுக்க வேண்டிய நடவடிககைகள்

உங்கள் வங்கி/என்பிஎஃப்சியைத் தொடர்புகொண்டு உங்கள் கணக்கு/கார்டை உடனடியாக பிளாக் செய்யவும் மேலும் ஒரு எழுத்துபூர்வமான புகாரை சமர்ப்பிக்கவும்

இந்திய சைபர் கிரைம் ஒருங்கிணைப்பு மையத்தில் ஒரு புகார்/எஃப்ஐஆரைப் பதிவுசெய்யவும் அல்லது சைபர் குற்றம் உதவி எண் 1930 ஐ அழைக்கவும்

பயனர் கணக்கில் நிதியை பிளாக் செய்ய உங்கள் கிளையைத் தொடர்பு கொள்ளவும்

வங்கி/என்பிஎஃப்சி உங்கள் புகாரைத் தீர்க்காவிட்டால் விஷயத்தை ஆர்பிஐ ஒம்புட்ஸ்மேன் கவனத்துக்குக் கொண்டு செல்லவும்



டிஜிட்டல்/ஆன்லைன் மோசடி தடுப்பு

- உடனடி விழிப்பூட்டல்களைப் பெற, உங்கள் மொபைல் எண் மற்றும் மின்னஞ்சலை உங்கள் வங்கியில் பதிவு செய்யவும்
- மொபைல், மின்னஞ்சல் அல்லது வாலட்டில் முக்கியமான வங்கித் தரவை ஒருபோதும் சேமிக்க வேண்டாம்
- ஆன்லைன் வங்கிச் சேவைக்கு சரிபார்க்கப்பட்ட, பாதுகாப்பான மற்றும் நம்பகமான இணையதளங்களை மட்டுமே பயன்படுத்தவும்
- பொது, திறந்த அல்லது இலவச நெட்வொர்க்குகள் மூலம் வங்கிச் சேவை பெறுவதைத் தவிர்க்கவும்
- உங்கள் ஆன்லைன் பேங்கிங் கடவுச்சொல் மற்றும் குறியெண்ணை அடிக்கடி மாற்றவும்
- உங்கள் ஏடிஎம் கார்டு, டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, ப்ரீபெய்ட் கார்டு தொலைந்துவிட்டாலோ அல்லது திருடப்பட்டாலோ உடனடியாக பிளாக் செய்யுங்கள்

வாடிக்கயாளர் பாதுகாப்புக் கொள்கை

அமைப்புகள் மற்றும் செயல்முறைகளை பலப்படுத்துதல்- எலக்ட்ரானிக் வங்கி பரிவர்த்தனைகளை மேற்கொள்வதில் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான உணர்வை ஏற்படுத்த வங்கிகளில் உள்ள அமைப்புகள் மற்றும் செயல்முறைகள்

- பலமான மற்றும் டைனமிக் மோசடி கண்டறியும் மற்றும் தடுப்பு வழிமுறை;
- அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளின் விளைவாக ஏற்படும் அபாயங்களை (உதாரணமாக, வங்கியின் தற்போதைய அமைப்புகளில் உள்ள குறைபாடுகள்) மதிப்பிடுவதற்கான பொறிமுறை மற்றும் அத்தகைய நிகழ்வுகளிலிருந்து எழும் பொறுப்புகளை அளவிடுதல்;
- அபாயங்களைக் குறைப்பதற்கும், அதனால் ஏற்படும் பொறுப்புகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் பொருத்தமான நடவடிக்கைகள்;
- எலக்ட்ரானிக் வங்கி மற்றும் பணம் செலுத்துதல் தொடர்பான மோசடிகளில் இருந்து தங்களை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்பது குறித்து வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து மற்றும் மீண்டும் மீண்டும் ஆலோசனை வழங்கும் அமைப்பு
- அங்கீகரிக்கப்படாத எலக்ட்ரானிக் வங்கிப் பரிவர்த்தனைகளுக்கு வாடிக்கையாளர்களுக்கு இழப்பீடு வழங்க வெளிப்படையான, பாரபட்சமற்ற மற்றும் ஸ்டிப்புலேட்டட் பொறிமுறை

வங்கியியலில் தொழில்நுட்ப பயன்பாடு

- **டிஜிட்டல் பேங்கிங் 'வசதியானது' மற்றும் 'பாதுகாப்பானது'. எந்த நேரத்திலும், எங்கும் பரிவர்த்தனை செய்யலாம்**
- உங்கள் வீட்டில் இருந்த வண்ணமே உங்கள் விரல் நுனியில் வங்கிச் சேவை
- விரைவான மற்றும் பாதுகாப்பாக பணம் செலுத்துவதன் மூலம் நேரத்தை மிச்சப்படுத்துகிறது
- பல்வேறு பரிவர்த்தனைகளுக்கு பல டிஜிட்டல் கட்டண ஆப்ஷன்கள்
- என்இஎஃப்டி, ஐஎம்பிஎஸ், யுபிஐ மற்றும் பிபிபிஎஸ் ஆகியவை 24x7 மணிநேரமும் கிடைக்கும்

ஸ்மார்ட்போன் அல்லது இணைய அணுகல் இல்லையா? *99# ஐப் பயன்படுத்தி டிஜிட்டலுக்குள் செல்லவும்

யுஎஸ்எஸ்டி குறியீட்டை டயல் செய்வதன் மூலம் இணைய இணைப்பு இல்லாமல் ஃபீச்சர் ஃபோன்/ஸ்மார்ட் ஃபோனைப் பயன்படுத்தி இரண்டு வங்கிக் கணக்குகளுக்கு இடையில் பணப் பரிமாற்றத்தை அனுமதிக்கும் இயங்குதளம் (*99#)

- உங்கள் யுபிஐ குறியெண்ணைப் பயன்படுத்தி, பயனரின் மெய்நிகர் முகவரியைத் தெரிந்துகொள்வதன் மூலம், எந்தவொரு பயனருக்கும் தடையின்றி பணத்தை மாற்றலாம்.
- பயனரிடம் மெய்நிகர் முகவரி இல்லையென்றால், ஐஎஃப்எஸ்ஸி மற்றும் கணக்கு எண் அல்லது வங்கி கணக்கு அல்லது மொபைல் எண்ணுடன் இணைக்கப்பட்ட ஆதார் எண் மூலம் பயனருக்கு நிதியை மாற்றுவதற்கான ஆப்ஷனும் உள்ளது.

ஒருமுறைப் பதிவுச் செயல்முறை

1. *99# க்கு டயல் செய்து மொழியைத் தேர்ந்தெடுக்கவும்
2. உங்கள் வங்கி ஐஎஃப்எஸ் கோடின் முதல் நான்கு எண்களை உள்ளிடவும்
3. வங்கிக் கணக்கைத் தேர்ந்தெடுக்கவும்
4. உங்கள் மெய்நிகர் பேமெண்ட் முகவரி (விபிஏ) அல்லது யுபிஐ ஐடி-தான் மொபைல்@யுபிஐ
5. *99*7*1# க்கு டயல் செய்து, பின்வருவதை கீ-இன் செய்து யுபிஐ குறியெண்ணை உருவாக்கவும் ஏடிஎம் கார்டின் கடைசி 6 இலக்கங்கள் மற்றும் ஏடிஎம் கார்டு காலாவதியாகும் மாதம் & வருடம்

இணைய அணுகலுடன் கூடிய ஸ்மார்ட்போன் உங்களிடம் உள்ளதா? யூனிஃபைட் பேமெண்ட்ஸ் இன்டர்ஃபேஸ் (யுபிஐ) தளத்தைப் பயன்படுத்தி டிஜிட்டலுக்குள் செல்லவும்

இணைய அணுகலைக் கொண்ட மொபைலைப் பயன்படுத்தி இரண்டு வங்கிக் கணக்குகளுக்கு இடையே பணப் பரிமாற்றத்தை அனுமதிக்கும் தளம்

- உங்கள் யுபிஐ குறியெண்ணைப் பயன்படுத்தி, பயனரின் மெய்நிகர் முகவரியைத் தெரிந்துகொள்வதன் மூலம், எந்தவொரு பயனருக்கும் தடையின்றி பணத்தை மாற்றலாம். பயனரிடம் மெய்நிகர் முகவரி இல்லையென்றால், ஐஎஃப்எஸ்ஸி மற்றும் கணக்கு எண் மூலம் பயனருக்கு நிதியை மாற்றும் ஆப்ஷனும் உள்ளது.

ஒருமுறைப் பதிவுச் செயல்முறை

1. பிஎச்ஐஎம் செயலியைப் பதிவிறக்கவும்
2. செயலியைத் திறக்கவும், சாதனத்தைப் பதிவு செய்ய அவுட்வேர்ட் எஸ்எம்எஸ் அனுப்பப்படும்
3. உள்நுழைவு கடவுக்குறியீட்டை உருவாக்கி, உள்நுழைந்த பிறகு வங்கிக் கணக்கைத் தேர்ந்தெடுக்கவும்
4. உங்கள் மெய்நிகர் கட்டண முகவரி (விபிஏ) அல்லது யுபிஐ ஐடி மொபைல்@யுபிஐ ஆக இருக்கும்
5. பின்வருபவற்றைக் கீயிங்இன் செய்து யுபிஐ குறியெண்ணை உருவாக்கவும் ஏடிஎம் கார்டின் கடைசி 6 இலக்கங்கள் ஏடிஎம் கார்டு காலாவதியாகும் மாதம் & வருடம் & உங்கள் மொபைல் எண்ணில் பெறப்பட்ட ஓடிபி

மூத்த மற்றும் மாற்றுத்திறனாளி குடிமக்களுக்கு வீட்டு வாசலில் வங்கி சேவைகள்

மூத்த குடிமக்களுக்கு வசதியான முறையில் வங்கிச் சேவையை வழங்குமாறு வங்கிகளை ரிசர்வ் வங்கி கேட்டுக் கொண்டுள்ளது

- நீங்கள் 70 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால், சில அடிப்படை வங்கி வசதிகளை உங்கள் வீட்டில் இருந்தே பெறலாம்
- வங்கிகளின் பதிவேடுகளில் இருக்கும் பிறந்த தேதியின் அடிப்படையில், வங்கிகள் தானாகவே முழு கேஒய்சி இணக்கக் கணக்கை ‘மூத்த குடிமக்கள் கணக்காக’ மாற்றும்.
- மூத்த குடிமக்கள் தங்கள் வங்கித் தேவைகளுக்கு முன்னுரிமை பெறும் கிளைகளில் வங்கிகள் பிரத்யேக கவுண்டர்களை வழங்குகின்றன.



மாற்றுத் திறனாளிகளுக்கு வங்கிச் சேவைகள்

- மூன்றாம் தரப்பு காசோலைகள், ஏடிஎம் வசதி, நெட் பேங்கிங் வசதி, லாக்கர் வசதி, சில்லறை கடன்கள், கிரெடிட் கார்டுகள் போன்ற அனைத்து வங்கி வசதிகளும் எந்தவித பாகுபாடுமின்றி பார்வையற்றவர்களுக்கு வழங்கப்படுவதை வங்கிகள் உறுதி செய்கின்றன.
- பார்வையற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் பிரெய்லி கீபேடுடன் கூடிய குறைந்தபட்சம் ஒரு பேசும் ஏடிஎம் பொதுவாகக் கிடைக்கும்.

- சக்கர நாற்காலி பயன்படுத்துபவர்கள் / மாற்றுத்திறனாளிகள் எளிதாக அணுகும் வகையில், தற்போதுள்ள அனைத்து **ஏடிஎம்கள்** / எதிர்கால ஏடிஎம்கள் சரிவு அமைப்புடன் இருப்பதை வங்கிகள் உறுதி செய்கின்றன. மேலும் **ஏடிஎம்**-இன் உயரம் சக்கர நாற்காலியில் பயணிப்பவர் பயன்படுத்துவதில் தடையை ஏற்படுத்தாத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- மாற்றுத்திறனாளிகள் / சக்கர நாற்காலியைப் பயன்படுத்துபவர்கள் வங்கிக் கிளைகளுக்குள் நுழைந்து அதிக சிரமமின்றி வணிகத்தை நடத்துவதற்கு, வங்கிக் கிளைகளின் நுழைவாயிலில் சாய்வுப் பாதைகளை அமைத்து வங்கிகளும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கின்றன.

எம்எஸ்எம்இ-கள்/சுய உதவி குழுக்களுக்கு கிடைக்கும் வங்கி சேவைகள்

எஸ்எச்ஜி சேமிப்பு கணக்குகளுக்கான கேஒய்சி:

- எஸ்எச்ஜி-யின் சேமிப்பு வங்கிக் கணக்கைத் திறக்கும் போது எஸ்எச்ஜி -யின் அனைத்து உறுப்பினர்களின் கேஒய்சி-யையும் சரிபார்க்க வேண்டியதில்லை.
- அனைத்து அலுவலக பணியாளர்களின் கேஒய்சி சரிபார்ப்பு போதுமானதாக இருக்கும்.
- எவ்வாறாயினும், சுய உதவிக்குழுவின் சார்பாக கணக்கைத் திறக்க அங்கீகரிக்கப்பட்ட அலுவலகப் பணியாளர்களின் கேமைக் குறிக்கும் சுய உதவிக்குழுவின் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மார்ஜின் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகள்

- கடன்களைப் பெறுவதற்கு எஸ்எச்ஜிஎஸ்-இல் இருந்து பிணையம் எதுவும் பெறுவதில்லை
- சுய உதவிக் குழுக்கள் பல ஆண்டுகளாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்தால்
- எஸ்எச்ஜிஎஸ் கடந்த கால கடன்களைச் சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்தியிருந்தால்
- எஸ்எச்ஜிஎஸ் கடன் வசதியை பொறுப்புடன் பயன்படுத்தி இருந்தால்
- கார்பஸின் நான்கு மடங்குக்கும் அதிகமான கடன் தொகையைப் பெறலாம்.

தன்னார்வ சேமிப்பு

- தன்னார்வ சேமிப்பை இரண்டு வழிகளில் கணக்கிடலாம்:
  - ❖ குழு கார்பஸின் ஒரு பகுதியாக இல்லை
  - ❖ குழு கார்பஸின் ஒரு பகுதியாக மற்றும் குழுவிற்குள் கடன் வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது
- வங்கியிடமிருந்து குழுவிற்குக் கொடுக்கப்படும் கடனின் அளவை மதிப்பிடுவதற்கு தன்னார்வ சேமிப்பு கணக்கிடப்படும். குழுவின் உறுப்பினர்களின் தன்னார்வச் சேமிப்புகள், குழுவிலிருந்து வரும் வட்டி வருமானம் அல்லது ஈவுத்தொகையில் விகிதாசாரப் பங்குக்கு தகுதியானதா என்பதை சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கூட்டாக முடிவு செய்வார்கள்.

AXIS BANK